# பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகை (School Saving Bonus)

## அரசுப் பள்ளிப் பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

## பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகை (School Saving Bonus) பற்றி

விக்டோரிய அரசானது ஒரேமுறை வழங்கப்படும் 400 டாலர்கள் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையை (School Saving Bonus) வழங்குவதன் மூலம், குடும்பங்களுக்கு வாழ்க்கையை நடத்துவதைச் சிறிது எளிதாக்குகிறது.

பள்ளி சீருடைகள், பாடப்புத்தகங்கள் மற்றும் முகாம்கள், உல்லாசப் பயணங்கள் மற்றும் விளையாட்டுகள் போன்ற பள்ளிச் செயல்பாடுகளுக்கான செலவை ஈடுசெய்ய இந்த ஆதரவு உதவிடும்.

முகாம்கள், விளையாட்டுகள் மற்றும் உல்லாசப் பயணங்கள் நிதி (CSEF) மற்றும் மலிவுவிலைப் பள்ளிச் சீருடைகள் திட்டத்திற்கான ஏற்கனவே உள்ள மற்றும் தொடர்ந்து தகுதிச் சோதனை செய்யப்பட்ட ஆதரவுகளுடன், கூடுதலாக பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையும் (School Saving Bonus) உள்ளது.

பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையானது (School Saving Bonus), பள்ளிகள் மற்றும் குடும்பங்களுக்குப் பருவம் 4, 2024 -இல் வழங்கப்படும்.

## பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையை (School Saving Bonus) யார் பெறுகிறார்கள்

2025 -ஆம் ஆண்டில் முழுக் கட்டணம் செலுத்தும் சர்வதேச மாணவர்கள், வீட்டுப் பள்ளி மாணவர்கள், TAFE மாணவர்கள் மற்றும் மழலையர் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தவிர, 2025 -ஆம் ஆண்டில் ஆரம்ப நிலைக் கல்வி முதல் 12 -ஆம் வகுப்பு வரையிலான அனைத்து விக்டோரிய அரசுப் பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகை (School Saving Bonus) கிடைக்கும்.

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான நடவடிக்கைகள்

மேலே உள்ள பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகைக்கான (School Saving Bonus) தகுதியைப் பூர்த்தி செய்யும் குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் **18 அக்டோபர் 2024 வெள்ளிக்கிழமைக்குள்** பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- **முழுமையாகச் சேர்க்கைப் பதிவு செய்தல்**

உங்கள் குழந்தையோ அல்லது குழந்தைகளோ பருவம் 1, 2025 -ஆம் ஆண்டில் அரசுப் பள்ளியைப் மாற்றினாலோ, அல்லது 2025 -ஆம் ஆண்டு ஆரம்ப நிலைக் கல்வியை அல்லது 7 -ஆம் வகுப்பைத் தொடங்கினாலோ, தயவுசெய்து சேர்க்கைப் பதிவினைச் செய்து முடிக்கவும். மேலும் தகவல்களுக்கு, பள்ளியில் சேர்க்கைப் பதிவு செய்வது பற்றிப் படிக்கவும்.

- **உங்களது தொடர்புத் தகவல்களைச் சரிபார்க்கவும்**

உங்களது தொடர்புத் தகவல்கள் புதுப்பித்த நிலையில் இருக்கிறதா என்பதை உங்கள் பள்ளியில் உறுதிசெய்து கொள்ளவும். உங்கள் பள்ளியை நேரடியாகத் தொடர்புகொண்டு, நீங்கள் இந்தத் தகவல்களைச் சரிபார்த்துக் கொள்ளலாம்.

## 400 டாலர்கள் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையைப் (School Saving Bonus) பெறுவது

பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகைக்கு (School Saving Bonus) நீங்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

உங்கள் 400 டாலர்கள் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையுடன் (School Saving Bonus) கல்வித் திணைக்களம் 2024 நவம்பர் மாதத்தில் உங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பும். ஓர் இணைய அமைப்பு மூலம் நீங்கள் அதைப் பெற முடியும்.

உங்கள் குடும்பத்தின் தேவைகளுக்குப் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையை (School Saving Bonus) எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்துவது என்பதை நீங்கள் தீர்மானிக்கலாம். இணைய அமைப்பில் 400 டாலர்களை எவ்வாறு ஒதுக்குவது என்பதை நீங்கள் தேர்வு செய்யலாம்.

ஊக்கத் தொகையை 2025 -ஆம் ஆண்டுக்கான பள்ளிச் செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம், இதில் பின்வருவன அடங்கும்:

- முகாம்கள், பயணங்கள், உல்லாசப் பயணங்கள் மற்றும் வெளியார் நிகழ்வுகள்
- நீச்சல் மற்றும் விளையாட்டுத் திட்டங்கள்
- வெளிப்புறக் கல்வி திட்டங்கள்
- பட்டப்படிப்புகள்
- பள்ளிச் சீருடைகள்
- பாடப்புத்தகங்கள்.

ஊக்கத் தொகையை உங்கள் பள்ளியின் அங்கீகரிக்கப்பட்ட பாடப்புத்தகம் அல்லது சீருடை வழங்குவோரிடமிருந்து கடையிலோ அல்லது இணைய வழியோ அல்லது மாநிலப் பள்ளிகளின் நிவாரணம் மூலமோ பயன்படுத்திக் கொள்ளலாம். வழங்குவோரின் பட்டியலில் பள்ளிச் சீருடை அல்லது புத்தகக் கடை இருக்கலாம். பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளுக்கு நீங்கள் ஒதுக்கும் எந்தத் தொகையும் 30 ஜூன் 2025 வரை செல்லுபடியாகும். அதன்பின் அது எதிர்காலச் செயல்பாடுகளுக்காக, உங்கள் குழந்தையின் பள்ளிக் கணக்கிற்கு மாற்றப்படும்.

2025 -ஆம் ஆண்டில் நிதியனைத்தும் செலவழிக்கப்படாவிட்டால், அடுத்துவரும் ஆண்டுகளில் அது பயன்படுத்தப்படும்.

## ஒன்றுக்கும் மேற்பட்ட தகுதியுள்ள குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள்

ஒரே பள்ளியில் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொண்டுள்ள குடும்பங்கள், ஒரு குழந்தைக்காக அல்லது ஒரு குறிப்பிட்ட செயல்பாட்டிற்குப் பயன்படுத்த, அனைவரின் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் பணத்தையும் ஒன்றாகச் சேர்க்கலாம். ஆகவே, எடுத்துக்காட்டாக, 3 அரசுப் பள்ளியில் படிக்கும் மாணவக் குழந்தைகளைக் கொண்ட ஒரு குடும்பம், 1,200 டாலர்கள் மதிப்பிலான உதவியைப் பெற்று, அந்த நிதியை எவ்வாறு செலவிடுவது என்பதை அக்குடும்பமே தேர்வு செய்துகொள்ளும். வெவ்வேறு பள்ளிகளைச் சேர்ந்த பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகை (School Saving Bonus) முழுவதையும் ஒன்றாக இணைத்துக் கொள்ள முடியாது.

## மேலதிகத் தகவல்கள்

பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகையைப் (School Saving Bonus) பற்றி மேலும் அறிந்துகொள்ள, vic.gov.au/school-saving-bonus என்ற இணையதளத்துக்குச் செல்லவும். அடுத்த சில வாரங்களில் பள்ளிச் சேமிப்பு ஊக்கத் தொகைக்கான (School Saving Bonus) இணையதளத்திலும் மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கள் கிடைக்கும்.

© 'விக்டோரிய அரசு' ('கல்வித் திணைக்களம்') 2024. வேறுவகையில் குறிப்பிடப்படாதவரை, இந்த ஆவணத்திலுள்ள விஷயம் Creative Commons Attribution 4.0 International -இன் கீழ் வழங்கப்படுகிறது. தயவுசெய்து பதிப்புரிமை அறிவிப்பு முழுவதையும் சரிபார்க்கவும்.